SRI LANKA

## இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்

# மட்டம் II பரீட்சை – ஜனவரி 2024

## (Level II Examination - January 2024)

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

# (202) டிஜிடல் சூழலில் தகவல் முறைமைகள் (ISD)

**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்**
இல, 640, வென். முறுத்தெட்டுவெவ ஆனந்த நாகிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05
தொ.பே - 011 2 559 669

கல்வி மற்றும் பயிற்சி பிரிவின் வெளியீடு

**இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்**

# பிரிவு II பரீட்சை – ஜனவர 2024

# (202) டிஜிட்டல் சூழலில் தகவல் முறைமைகள்

# பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**பதினைந்து (15) கட்டாய வினாக்கள்**
**(மொத்தம் 25 புள்ளிகள்)**

**பகுதி - A**

## *வினா 01 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **1.1** | (2) | **1.6** | (3) | **1.11** | *சரியானது* |
| **1.2** | (4) | **1.7** | (2) | **1.12** | *தவறானது* |
| **1.3** | (4) | **1.8** | (4) | **1.13** | *தவறானது* |
| **1.4** | (3) | **1.9** | (2) | **1.14** | *சரியானது* |
| **1.5** | (4) | **1.10** | (2) | **1.15** | *தவறானது* |

***வினா 1.1 – 1.10 - (ஒவ்வொன்றிற்கும் 02 புள்ளிகள் வீதம் ,20 புள்ளிகள்)***

***வினா 1.11 – 1.15 - (ஒவ்வொன்றிற்கும் 01 புள்ளிகள் வீதம் , 05 புள்ளிகள்)***

***(மொத்தம் 25 புள்ளிகள்)***

***பகுதி A முடிவு***

## *வினா 02 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:*

***அத்தியாயம் 01 - தகவல் முறைமைகளின் எண்ணக்கருக்கள் மற்றும் தகவல் முறைமைகளின் தாக்கம்***

**(a)**

1. மென்பொருள்
2. வன்பொருள்
3. நடைமுறைகள்
4. மனிதர்கள்
5. தகவல்
6. தொடர்பாடல்

***(03 புள்ளிகள்)***

**(b)**

1. **வினைத்திறனை அதிகரித்தல் -** தகவல் முறைமைகள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகியவை வணிக செயற்பாடுகளின் செயற்றிறனை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. வழக்கமான பணிகளின் தன்னியக்கம், நெறிப்படுத்தப்பட்ட தொடர்பாடல் மற்றும் நவீன மென்பொருள் மற்றும் வன்பொருட்களின் பயன்பாடு ஆகியன உற்பத்தித்திறனை அதிகரிப்பதில் பங்குவகிக்கின்றன. உதாரணமாக நிறுவன வளத் திட்டமிடல் முறைமையானது (ERP system) பல்வேறு வணிக செயல்முறைகளை ஒருங்கிணைத்து, வெவ்வேறு துறைகளுக்கிடையே நிகழ்நேர தகவல் பரிமாற்றத்தையும் மேற்கொள்ள வழிவகுக்கின்றது. இந்த ஒருங்கிணைப்பானது கைமுறை தரவு உள்ளீட்டைக் குறைக்கின்றது, தவறுகளைக் குறைக்கின்றது மற்றும் வளங்களை மிகவும் வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு உதவுகின்றது. வினைத்திறனான வணிக செயல்முறைகள் செலவைக் கட்டுப்படுத்தவும், விரைவான தீர்மானம் மேற்கொள்ளவும் மற்றும் ஒட்டுமொத்த செயற்றிறனின் மேம்பாட்டிற்கும் உதவுகின்றது.

2. **தொடர்பாடலை மேம்படுத்தல் -** தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் முறைமைகள் ஆகியன ஊழியர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு இடையே, வினைத்திறனான தகவல் பரிமாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலமும், தடையற்ற ஒத்துழைப்பை செயல்படுத்துவதன் மூலமும் மற்றும் மின்னஞ்சல், VoIP மற்றும் திறன் பேசிகள் (smart phones) போன்ற பல்வேறு தொடர்புசாதனங்களை வழங்குவதன் மூலமும் தொடர்பாடலை மேம்படுத்துகின்றது. இணைய நெறிமுறை மூலமான குரல் (VoIP) தொலைபேசிகள் மற்றும் திறன் பேசிகள் (smart phones) ஊழியர்களின் தொடர்பாடலிற்கான மேலும் உயர் தொழில்நுட்ப வழிகளை வழங்குகின்றன.

3. **பயனுறுதிவாய்ந்த இருப்பு முகாமைத்துவம்** - பயனுறுதிவாய்ந்த இருப்பு முகாமைத்துவமானது அதிகப்படியான முதலீட்டைக் குறைக்கும் அதே வேளை, கேள்வியைப் பூர்த்தி செய்யத் தேவையான இருப்பு மட்டத்தை பேணுவதைக் குறிக்கின்றது. இருப்பு முகாமைத்துவ முறைமைகள் பொருட்களின் அளவைக் கண்காணித்து நிர்ணயிக்கப்பட்ட மட்டங்களுக்குக் கீழே இருப்புகள் குறையும் போது தானாகவே கட்டளைகளைப் பிறப்பிக்கின்றன. இருப்புப் பற்றாக்குறை மற்றும் அதிகப்படியான இருப்பு வைத்திருப்பதற்கான செலவுகள் இரண்டையும் தவிர்த்து, நிறுவனங்கள் உகந்த இருப்பு மட்டத்தை பராமரிப்பதை இது உறுதி செய்கின்றது.

4. **தந்திரோபாயத் திட்டமிடல்** - தகவல் முறைமைகள் பெறுமதிமிக்க தரவுகளையும் மற்றும் நிறுவனங்கள் தகவலறிந்த மற்றும் தந்திரோபாயத் தீர்மானங்களையும் மேற்கொள்வதற்கான பகுப்பாய்வுக் கருவிகளையும் வழங்குகின்றன. வணிக நுண்ணறிவு (Business Intelligence -BI) முறைமைகள் பாரிய தரவுத்தொகுப்புகளைப் பகுப்பாய்வு செய்து அர்த்தமுள்ள நுண்ணறிவுகளைப் பெறுகின்றன. நிர்வாகிகள் மற்றும் முகாமையாளர்கள் சந்தைப் போக்குகள், வாடிக்கையாளர் நடத்தை மற்றும் உள்ளக் செயற்றிறன் அளவீடுகளைப் புரிந்துகொள்ளவும் உதவுகின்றன. துல்லியமான தகவல்களை சரியான நேரத்தில் அணுகுதலானது செயலூக்கமுள்ள தீர்மானங்களை மேற்கொள்வதற்கும், வாய்ப்புகளை அடையாளம் காண்பதற்கும் மற்றும் சவால்கள் மேலோங்குமுன் அவற்றை எதிர்கொள்வதற்கும் வழிவகுக்கின்றது. தகவல்களின் இவ்வாறான தந்திரோபாய பயன்பாடானது ஒட்டுமொத்த செயற்றிறனிற்கும் மற்றும் சந்தையில் வணிகத்தின் போட்டித்தன்மைக்கும் பங்களிக்கின்றது.

5. **சிறந்த வாடிக்கையாளர் தொடர்பு முகாமைத்துவம்** - நிறுவனங்கள் வாடிக்கையாளர் தொடர்புகளை வடிவமைத்து முகாமை செய்யும் முறையை மேம்படுத்த தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகின்றன. வாடிக்கையாளர் தொடர்பு முகாமைத்துவ (CRM) முறைமைகள் ஒரு நிறுவனம் ஒரு வாடிக்கையாளருடன் மேற்கொள்ளும் ஒவ்வொரு தொடர்புகளையும் கைப்பற்றுகிறது, இதனால், மேலும் வளமான அனுபவமானது சாத்தியமாகின்றது. ஒரு வாடிக்கையாளர் ஒரு பிரச்சனை தொடர்பாக கால் சென்டரை தொடர்புகொண்டால், வாடிக்கையாளர் ஆதரவு பிரதிநிதி வாடிக்கையாளர் எதைக் கொள்வனவு செய்தார் என்பதை அறியவும், கொள்வனவுத் தகவலைப் பார்க்கவும், அந்த விசாரணைக்கான பயிற்சி கையேட்டைப் பார்வையிடவும் மற்றும் பிரச்சனைக்கு பயனுறுதிவாய்ந்த முறையில் பதிலளிக்கவும் முடியும்.

6. **தகவல் முகாமைத்துவ முறைமை** - பாரிய கோப்புகளை களஞ்சியப்படுத்தும் அறைகள், கோப்புகளைக் கொண்ட அலுமாரிகளின் நிரைகள், ஆவணங்களை அஞ்சல் அனுப்பும் முறைகள் வேகமாக மறைந்து வருகின்றன. இன்று, பெரும்பாலான நிறுவனங்கள் ஆவணங்களின் டிஜிட்டல் பதிப்புகளை சேவையகங்கள் மற்றும் சேமிப்பு சாதனங்களில் சேமிக்கின்றன. இந்த ஆவணங்கள்

SRI LANKA

நிறுவனத்தில் உள்ள அனைவருக்கும் அவர்களின் புவியியல் இருப்பிடத்தைப் பொருட்படுத்தாமல் உடனடியாகக் கிடைக்கத்தக்கதாகவுள்ளன. நிறுவனங்கள் பொருளாதார ரீதியாக மிகப்பெரிய அளவிலான வரலாற்றுத் தரவைச் சேமித்து பராமரிக்க முடிகின்றது, மேலும் ஊழியர்கள் தங்களுக்குத் தேவையான ஆவணங்களை உடனடியாக அணுகுவதன் மூலம் பயனடைகின்றார்கள்.

7. **ஒப்பீட்டு அநுகூலம்** - தகவல் முறைமைகள் மற்றும் தொழில்நுட்பத்தின் மூலம் தந்திரோபாய தீர்மானத்திற்கான தரவு உந்துதல் நுண்ணறிவு, தனிப்பயனாக்கப்பட்ட சேவைகள் மற்றும் வினைத்திறனான செயல்பாடுகள் மூலம் வாடிக்கையாளர் அனுபவங்களை மேம்படுத்துதல், புத்தாக்கம் மற்றும் துரிதப்படியான செயல்படுத்துதல் மற்றும் நிறுவனத்திற்குள் ஒத்துழைப்பை வளர்ப்பதன் மூலம் ஒப்பீட்டு அநுகூலமானது அடையப்படுகின்றது. இது நிறுவனத்தை மற்றய நிறுவனத்திடமிருந்து வேறுபாடுத்திக் காட்டவும், சந்தைப் பங்கை அதிகரிக்கவும் மற்றும் மாறும் வணிக சூழலில் நிலையான வளர்ச்சிக்கும் வழிவகுக்கின்றது.

8. **செலவைக் குறைத்தல் மற்றும் வளத்தை உச்சப்படுத்தல்** - தகவல் முறைமைகள் மற்றும் தொழில்நுட்பம், செயல்முறைகளை தானியக்கமாக்குதல், செயல்பாடுகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் செயல்திறனை மேம்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் செலவைக் குறைக்கின்றது மற்றும் வளங்களை மேம்படுத்துகிறது. தரவு பகுப்பாய்வு மூலம், நிறுவனங்கள் மேம்படுத்துவதற்கான பகுதிகளை அடையாளம் காண்கின்றன, விரயங்களைக் குறைக்கின்றன மற்றும் வளங்களை மிகவும் வினைத்திறனாக ஒதுக்குகின்றன. இது உற்பத்தித்திறனை மேம்படுத்தவும், செயல்பாட்டு செலவுகளைக் குறைக்கவும் மற்றும் நிறுவன வளங்களை சிறந்த முறையில் பயன்படுத்தவும் வழிவகுக்கின்றது.

SRI LANKA

***(04 புள்ளிகள்)***

**(c)**

தகவல் தொழில்நுட்பம் (IT) மற்றும் தகவல் முறைமைகள் (IS) ஆகியன நவீன வணிக சூழலுக்கு ஒருங்கிணைந்ததாகவுள்ள நெருங்கிய தொடர்பைக் கொண்ட கருத்துக்களாகும். தகவல் தொழில்நுட்பம் எனப்படுவது வன்பொருள், மென்பொருள், வலையமைப்புகள் மற்றும் ஒரு நிறுவனத்திற்குள் தகவலைச் சேமிக்க, செயலாக்க, அனுப்ப மற்றும் மீட்டெடுக்கப் பயன்படுத்தப்படும் பிற தொழில்நுட்ப கருவிகளையும் வளங்களையும் குறிக்கின்றது. இது கணினிகள், சேவையகங்கள், தரவுத்தளங்கள், வலையமைப்புகள் மற்றும் மென்பொருள் பிரயோகங்கள் உட்பட கணினி தொழில்நுட்பத்தின் முழு வகைகளையும் உள்ளடக்கின்றது. தகவல் தொழில்நுட்பமானது வினைத்திறனான முகாமைத்துத்தையும் தகவல் செயலாக்கத்தை செயல்படுத்தும் உட்கட்டமைப்பையும் கருவிகளையும் உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது.

மறுபுறம், தகவல் முறைமைகள் (IS) எனப்படுவது தகவல் தொழில்நுட்பத்தின் பரந்த, நிறுவன மட்டத்திலான பயன்பாட்டைக் குறிக்கின்றது. வணிக செயல்முறைகளிற்கும்

தீர்மானமெடுத்தலிற்கும் மற்றும் ஒட்டுமொத்த நிறுவன செயல்பாடுகளிற்கும் ஆதரவாகவுள்ள IT கூறுகளின் ஒருங்கிணைப்பை IS உள்ளடக்கியுள்ளது. தகவல் முறைமைகளானது தொழில்நுட்பக் கூறுகளை மட்டுமின்றி வணிக நோக்கங்களை அடைவதற்கு ஒன்றாகச் செயல்படும் நபர்கள், செயல்முறைகள் மற்றும் தரவு ஆகியவற்றையும் உள்ளடக்கியுள்ளது. சாராம்சமாக, IT என்பது IS இன் ஒரு பகுதியாகும், IT தானாகவே தொழில்நுட்பத்தின் மீது கவனம் செலுத்துகிறது, மேலும் தகவல் முகாமையையும் தீர்மானமெடுக்கும் செயல்முறைகளையும் எளிதாக்குவதற்கு ஒரு நிறுவனத்திற்குள் தொழில்நுட்பமானது எவ்வாறு தந்திரோபாயமாக பயன்படுத்தப்படுகிறது என்பது பற்றிய விரிவான பார்வையை இது உள்ளடக்கியுள்ளது. பயனுறுதிவாய்ந்த தகவல் முறைமைகள் நன்கு பிரயோகிக்கப்பட்ட மற்றும் முகாமை செய்யப்பட்ட தகவல் தொழில்நுட்பத்தை நம்பியிருப்பதால், IT மற்றும் IS ஆனது ஒன்றையொன்று சார்ந்துள்ளது.

***(03 புள்ளிகள்)***
***(மொத்தம் 10 புள்ளிகள்)***

## *வினா 03 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:*

***அத்தியாயம் 02 - தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு***

**(a)**

1. திறன்பேசி (smartphone).
2. டப்லெட் (Tablet).
3. மடிக்கணனி / குறிப்புப் புத்தம் (Laptop/Notebooks).
4. Ultra mobile PCs.
5. தனிப்பட்ட கணனிகள் (PCs).
6. PDAs.
7. Netbook.

***(02 புள்ளிகள்)***

**(b)**

| சாதனம் | வலையமைப்பு இணைப்புத் தெரிவுகள் | இயங்குதள முறைமைகள் |
|---|---|---|
| Laptop/Notebook<br>மடிக்கணனி / குறிப்புப் புத்தகம் | LAN, Wi-Fi, Bluetooth, Ethernet, Cellular (in some cases) | Windows, Mac OS X, Linux |
| Smartphones<br>திறன் பேசி | Mobile Data, 3G, 4G, 5G, Wi-Fi, Bluetooth | Android, iOS, Windows Mobile |
| Tablets | Wi-Fi, 3G, 4G, 5G, Mobile Data, Bluetooth | Android, iOS, Windows Mobile, |

| | | |
|---|---|---|
| | | Chrome OS |
| Netbook | Wi-Fi, Bluetooth | Windows, Linux |
| Ultra mobile PC | Wi-Fi, Cellular (3G, 4G, 5G), Mobile Data, Bluetooth | Android, iOS, Windows Mobile, Chrome OS |
| PDAs | Wi-Fi, Cellular (3G, 4G, 5G), Mobile Data, Bluetooth | Android, iOS, Windows Mobile, Chrome OS, Other OSs |

***(04 புள்ளிகள்)***

**(c)**

i. சொல் செயலாக்க மென்பொருள்
மென்பொருள் பொதிகள்: Microsoft Word, Google Docs, Open Office Writer

ii. Desktop Publishing மென்பொருள்
மென்பொருள் பொதிகள்: Adobe InDesign, Microsoft Publisher, QuarkXPress, Serif-Page Plus, Scribus

***(04 புள்ளிகள்)***

***(மொத்தம் 10 புள்ளிகள்)***

## *வினா 04 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:*

***அத்தியாயம் 03 - நிறுவனங்களில் தகவல் முறைமைகள்***

aat SRI LANKA

**(a)**

1. **பயன்படுத்த எளிதான தன்மை -** இம் முறைமையைப் பயன்படுத்துவதற்குத் தேவையான அனைத்து ஊழியர்களுக்கும் எவ்வளவு தூரம் பயன்படுத்த எளிதாக இருக்கின்றது என்பதைக் கவனித்துக்கொள்ள வேண்டும். சில நிறுவனங்கள், சந்தைப்படுத்தல் நிபுணர், தகவல் தொழில்நுட்பத் துறை, தரவுத்தள உருவாக்குநர்கள் மற்றும் பல்வேறு நபர்களை உள்ளடக்கியிருக்கலாம். ஒவ்வொருவரின் தேவைக்கேற்ப, வெவ்வேறு பயனர்களுக்கு வெவ்வேறு அளவிலான அணுகலுக்கான அனுமதியை நிறுவனம் அமைக்க முடியுமா என்பதைக் கவனித்துக்கொள்ள வேண்டும்.

2. **இணக்கத்தன்மை -** தடையற்ற ஒருங்கிணைப்பை ஊக்குவிக்க, தேர்ந்தெடுக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப முறைமையானது ஏற்கனவே உள்ள உட்கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்பங்களுடன் இணங்கும் தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இணக்கத்தன்மை தொடர்பான பிரச்சனைகள் செயற்பாட்டு இடையூறுகளுக்கும் மற்றும் செலவு அதிகரிப்பிற்கும் வழிவகுக்கலாம்.

3. **காட்சிப்படுத்தல் மற்றும் அறிக்கையிடல்** - IT முறைமைகளைத் தேர்ந்தெடுத்து பிரயோகிக்கும் போது காட்சிப்படுத்தல் மற்றும் அறிக்கையிடல் ஆகியன முக்கியமானவைகளாகக் கருதப்படுகின்றன. சாத்தியமான முறைமைகள் தரவு காட்சிப்படுத்தலுக்கான எளிதான பயன்பாட்டு இடைமுகங்களை வழங்கக்கூடியதாகவும் தகவலின் உள்ளார்ந்த விளக்கத்தை வழங்குவதாகவும் காணப்பட வேண்டும். மேலும், வலுவான அறிக்கையிடல் திறன்கள், தகவல் தொழில்நுட்ப முறைமையின் திறன்களை திறம்பட பயன்படுத்துவதற்கு வசதியாகவும், தகவலறிந்து தீர்மானமெடுப்பதற்கான அறிவை அக்கறையுடையோர்களுக்கு வழங்குவதையும் உறுதிப்படுத்த வேண்டும்.

4. **பாதுகாப்பு** - எந்தவொரு தகவல் முறைமை செயலாக்கத்திலும் நிறுவனத் தரவைப் பாதுகாப்பது இன்றியமையாதது. மனிதத் தவறுகளால் ஏற்படும் இழப்பு, திருட்டு அல்லது ஊழலில் இருந்து வணிக உணர்திறன் மற்றும் தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாப்பதை உள்ளடக்கியது. குறியாக்கம், அணுகல் கட்டுப்பாடுகள் மற்றும் வழக்கமான பாதுகாப்பு தணிக்கைகளை செயல்படுத்துவது விதிமுறைகளுக்கு இணங்குவதை உறுதிசெய்கிறது மற்றும் இணைய அச்சுறுத்தல்களிலிருந்து பாதுகாக்கிறது, தரவு ஒருமைப்பாடு மற்றும் ரகசியத்தன்மைக்கு முன்னுரிமை அளிக்கிறது.

5. **அளவிடுதல்** - IT முறைமைகளின் தெரிவு மற்றும் செயல்படுத்தலின் போது கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும் ஒரு முக்கிய காரணி அளவிடுதல் ஆகும். இது காலப்போக்கில் மாறிவரும் தேவைகளுக்கு ஏற்றவாறு வளர்ச்சியடையும் மற்றும் மாற்றியமைப்பதற்கான முறைமையின் இயலுமையை மதிப்பிடுவதை உள்ளடக்கியதாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட முறைமை, செயல்திறன் அல்லது செயல்பாட்டில் சமரசம் செய்யாமல் அதிகரித்து வரும் கேள்விகளுக்கும் மற்றும் விரிவாக்கங்களுக்கும் இடமளிக்கும் அளவுக்கு நெகிழ்வானதாக இருக்க வேண்டும்.

6. **செயற்பாடும் தன்மை** - ஒரு IT முறைமையைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் போது, கிடைக்கக்கூடிய தொகுதிகள் மற்றும் கூறுகள் முக்கிய வணிகத் தேவைகளுடன் ஒத்துப்போவதை உறுதி செய்வதன் மூலம் செயல்பாட்டுத் தன்மை மதிப்பிடப்படுகிறது. முறைமையின் அம்சங்கள் மற்றும் தகைமைகள் நிறுவனத்தின் குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதை உறுதி செய்வதையும், திறமையான செயல்பாடுகளைச் செயல்படுத்துவதையும், முக்கிய வணிகச் செயல்முறைகள் பயனுறுதிவாய்ந்த வகையில் செயற்பட உதவுவதையும் இது உள்ளடக்குகின்றது.

7. **ஆதரவு மற்றும் அபிவிருத்தி** - ஒரு தகவல் தொழில்நுட்ப முறைமையைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் போது ஆதரவு மற்றும் அபிவிருத்தி ஆகியவை ஒருங்கிணைந்து கருத்தில் கொள்ளப்பட வேண்டியவையாகக் கருதப்படுகின்றன. மென்பொருள் நிறுவனத்தால் வழங்கப்படும் ஆதரவு சேவைகளை மதிப்பீடு செய்வது, உடனடி உதவி மற்றும் சிக்கல்களைத் தீர்ப்பதை உறுதி செய்வது முக்கியமாகும். மேலும், தெளிவான அபிவிருத்தித் திட்டத்தை

வைத்திருத்தலானது வாடிக்கையாளர்களுக்கு மென்பொருள் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுடன் அபிவிருத்தியடைந்து வருவதையும், அதன் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து ஆதரவையும் மேம்படுத்தலையும் வழங்குவதையும் உறுதி செய்கின்றது.

8. **ஒருங்கிணைப்பு** - இது தற்போதைய தரவுத்தளங்கள், இயங்குதளங்கள் மற்றும் வன்பொருளுடன் புதிய முறைமையானது தடையின்றி இணைந்து செயற்பட முடியுமா என்பதை மதிப்பிடுவதைக் குறிப்பிடுகின்றது. மேலும், தேவையான இடைமுகக் கூறுகளைக் கண்டறிவது, அமைப்புகளின் சீரான ஒருங்கிணைப்பையும் இடையூறுகளைக் குறைத்தல் மற்றும் செயல்திறனை அதிகரிப்பதையும் உறுதி செய்கின்றது.

9. **செலவு மற்றும் பொருத்தமான தன்மை** - ஒரு தகவல் தொழில்நுட்ப முறைமையைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் போது, உகந்த தீர்மானமெடுப்பதை உறுதி செய்வதற்காக செலவு மற்றும் பொருத்தமான தன்மை மதிப்பீடு செய்யப்படுகின்றது. செலவு முக்கியமானது என்றாலும், தேர்ந்தெடுக்கப்பட்ட மென்பொருளானது வணிகத் தேவைகளை சிறப்பாகப் பூர்த்தி செய்வதை பொருத்தமான தன்மையானது உறுதிசெய்கின்றது. விலையில் மட்டும் கவனம் செலுத்தாமல், நோக்கத்திற்கு ஏற்ற பொருளைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் பாரிய தவறுகளைத் தவிர்ப்பது முக்கியம். இதேபோல், அதன் செயல்பாடுகள் பெரிதும் பயன்படுத்தப்படாவிட்டால் விலையுயர்ந்த மென்பொருள் தேவையில்லை.

10. **தொகுத்தல்** - ஒரு IT முறைமையைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் போது, ஹோஸ்டிங் ஒரு முக்கியமானதொன்றாகக் கருதப்படுகின்றது. முயைமையானது உள்நாட்டில் அல்லது மூன்றாம் தரப்பு நிறுவனத்தால் தொகுப்பு செய்யப்படுமா என்பதைத் தீர்மானிப்பதை இது கருதும். ஆதரவு, செலவு (கூடுதலான வன்பொருள் தேவைகள் உட்பட), பாதுகாப்பு மற்றும் வேகம் போன்ற காரணிகள் இந்த தீர்மானத்தால் பாதிக்கப்படுகின்றன, இது IT தீர்வின் ஒட்டுமொத்த வினைத்திறன் மற்றும் செயல்திறனையும் பாதிக்கின்றது.

11. **புதுப்பிப்புகளுக்கான தேவைகள்** - ஒரு தகவல் தொழில்நுட்ப முறைமையைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் போது, புதுப்பிப்புகளுக்கான அணுகுமுறையானது முக்கியமாக கவனிக்கப்பட வேண்டும். புதுப்பிப்புகளின் அதிர்வெண் மற்றும் தன்னியக்கம் ஆகியவை முக்கியமானவையாக கருதப்படுகின்றது. பிற முறைமைகளுடன் நிகழ்நேர இணைப்பு அவசியமா அல்லது தினசரி அல்லது வாராந்த புதுப்பிப்புகள் போதுமானதா என்பதை மதிப்பிட வேண்டும். மேலும், புதுப்பிப்பு செயல்முறையை தன்னியக்கமாக்குவதற்கு ஒரு நிலையான தரவு மூலம் தேவைப்படுகிறது, இது முறைமையின் நம்பகத்தன்மை மற்றும் செயல்திறனில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

***(04 புள்ளிகள்)***

aat SRI LANKA

**(b)**

- இது 24x7 ஆதரவை வழங்குகிறது. வாடிக்கையாளர்கள் ஒரு உற்பத்திப் பொருள் அல்லது சேவையைப் பற்றி விசாரித்தறியவாம் மற்றும் எந்த இடத்திலிருந்தும் எந்த நேரத்திலும் கொள்வனவுக் கட்டளையை மேற்கொள்ளலாம்.
- இலத்திரனியல் வர்த்தகத்தின் பயன்பாடானது பயனர்களுக்கு அதிகமான தெரிவுகளையும் விருப்பங்களையும் உற்பத்திகளின் விரைவான விநியோகத்தையும் வழங்குகிறது.
- இலத்திரணியல் வர்த்தகத்தின் பயன்பாடானது பயனர்களுக்கு மலிவான மற்றும் சிறந்த தெரிவுகளை ஒப்பிட்டுத் தேர்ந்தெடுப்பதற்கான அதிக தெரிவுகளை வழங்குகிறது.
- ஒரு வாடிக்கையாளர் ஒரு பொருளைப் பற்றிய மதிப்பாய்வுக் கருத்துகளை மேற்கொள்ளலாம் மற்றும் மற்றவர்கள் கொள்வனவு செய்வதை பார்க்கவும் முடியும் அல்லது இறுதி கொள்வனவுத் தீர்மானத்திற்கு முன் ஏனைய வாடிக்கையாளர்களின் மதிப்பாய்வு கருத்துகளைப் பார்க்கவும் முடியும்.
- இலத்திரனியல் வர்த்தகமானது மெய்நிகர் ஏலங்களின் தெரிவுகளையும் வழங்குகின்றது.
- இது எளிதில் கிடைக்கக்கூடிய தகவலை வழங்குகிறது. ஒரு வாடிக்கையாளர் நாட்கள் அல்லது வாரங்கள் காத்திருக்காமல், சில நொடிகளில் பொருத்தமான விரிவான தகவலைப் பார்க்க முடிகின்றது.
- இலத்திரனியல் வர்த்தகமானது நிறுவனங்களுக்கு இடையே போட்டியை அதிகரிக்கிறது மற்றும் அதன் விளைவாக, நிறுவனங்கள் வாடிக்கையாளர்களுக்கு கணிசமான தள்ளுபடிகளை வழங்குகின்றன.

***(03 புள்ளிகள்)***

aat
SRI LANKA

**(c)**

நிறுவன வளத் திட்டமிடல் முறைமைகள் (ERP) மற்றும் தொழிற்பாட்டுத் தகவல் முறைமைகள் (FIS) ஆகியன தகவல் முறைமைகளுக்குள் அவற்றின் நோக்கெல்லை மற்றும் நோக்கத்தின் அடிப்படையில் தனித்துவமான பங்குகளை வகித்து சேவையாற்றுகின்றன. ERP முறைமைகள், நிதி, மனிதவள மற்றும் விநியோகச் சங்கிலி முகாமை போன்ற பல்வேறு வணிகச் செயல்பாடுகளை உள்ளடக்கி, ஒருங்கிணைந்த தரவுப் பகிர்வு மூலம் நிறுவனத் வினைதிறன் மற்றும் தீர்மானமெடுத்தலை மேம்படுத்துகின்றன.

இதற்கு மாறாக, FIS ஆனது குறிப்பிட்ட துறைகள் அல்லது தனிப்பட்ட பகுதிகளில் தனித்துவமான செயல்பாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான சிறப்புத் தீர்வுகளை வழங்குகின்ற HRIS, AIS மற்றும் MIS போன்ற செயல்பாடுகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது. ERP முறைமைகள் பரந்த நிறுவன அளவிலான ஒருங்கிணைப்பை நோக்கமாகக் கொண்டிருந்தாலும், FIS ஆனது தகவல் முறைமைகளின் பரப்பினுள் உள்ள வணிக செயற்பாடுகளின் தனித்துவமான நோக்கெல்லை மற்றும் நோக்கத்துடன் தொடர்புபட்ட

குறிப்பிட்ட வணிகச் செயல்பாடுகளுக்கான இலக்கிற்கு உதவுவதில் கவனம் செலுத்துகின்றது.

***(03 புள்ளிகள்)***
***(மொத்தம் 10 புள்ளிகள்)***

## *வினா 05 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:*

***அத்தியாயம் 04 - தகவல் முறைமைகளுக்கான நெறிமுறை, சமூக அற்றும் சட்டச் சூழல்***

**(a)**

(i). பொருள் ஊக்குவிப்பு.

- வலைதளப்பதிவு -Blog posts
- காணொளிகள் - Videos
- வலையொளி - Podcasts
- கருத்துக்கள் - Comments
- பகிர்தல் - Share
- குறியிடுதல் - tagging

(ii). விற்பனைக்குப் பின்னரான சேவைகள்.

- வாடிக்கையாளர் உதவி ஊடகங்கள் (சமூகங்கள், Chatbots)
- தனிப்பட்ட செய்தியிடல்
- சமூகக் கட்டிடம் / குழுக்கள்
- பின்னூட்டல் மற்றும் மீளாய்வுகள்

***(02 புள்ளிகள்)***

**(b)**

- **வலு முகாமைத்துவம்:** சக்தி நுகர்வைக் குறைப்பதற்கும் செயற்பாடற்ற காலங்களில் கருவிகள் மற்றும் சாதனங்களின் வலுவைக் குறைப்பதற்குமான உத்திகளைச் நடைமுறைப்படுத்துதல்.
- **பணிகளை அட்டவணைப்படுத்தல்:** சக்திப் பயன்பாட்டை உச்சப்படுத்தவும், வீணான வன்பொருள் பாவனையைக் குறைக்கவும் குறிப்பிட்ட நேரத்திலான கணினி தொடர்பான பணிகளைத் அட்டவணைப்படுத்தல்.
- **சாதன முகாமை:** வலுவைச் சேமிக்க கதிர் அச்சுப்பொறிகள் போன்ற சக்தி மிகுந்த சாதனங்களைப் வலு உயர்வு மற்றும் வலு இறக்கம் செய்தல்.
- **வலு முகாமை அம்சங்கள்:** மின்சாரத்தைச் சேமிக்கவும் மற்றும் சக்தி வினைத்திறனை மேம்படுத்தவும் சாதனங்களில் காணப்படும் வலு முகாமை அம்சங்களைப் பயன்படுத்தல்.
- **காகிதப் பயன்பாட்டினைக் குறைத்தல்:** சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைக்க முடிந்தவரை டிஜிட்டல் ஆவணங்கள் மற்றும் மென் நகல்களைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் காகித பயன்பாட்டைக் குறைக்க முடியும்.

- **மின்னணுக் கழிவுகளை அப்புறப்படுத்தல்:** பொறுப்பான மீள்சுழற்சியை உறுதி செய்வதற்கும் சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைப்பதற்கும் மத்திய, மாநில மற்றும் உள்ளூர் விதிமுறைகளின்படி மின்னணுக் கழிவுகளை அப்புறப்படுத்துதல்.
- **மாற்று சக்தி:** புதைபடிம எரிபொருட்களை நம்பியிருப்பதைக் குறைக்க, பணிநிலையங்கள், சேவைகள், வலைப்பின்னல்கள் மற்றும் தரவு மையங்களைக் கணக்கிடுவதற்கு சூரிய அல்லது காற்றலை போன்ற மாற்று சக்தி மூலங்களைப் பயன்படுத்துவதை ஆராய்தல்.
- **சக்தி வினைத்திறன் மற்றும் வளப் பாதுகாப்பு:** சக்தி நுகர்வைக் குறைக்க மற்றும் வளங்களை பாதுகாக்க சக்தி வினைத்திறன் வன்பொருள் மற்றும் உபகரணங்கள் பயன்படுத்த முன்னுரிமை வழங்குதல்.
- **வாழ்க்கைச் சுழற்சி முகாமை:** முறையான அப்புறப்படுத்தும் முறைகளைப் பின்பற்றுதல் உட்பட, உற்பத்தி வாழ்க்கைவட்டம் முழுவதும் சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைக்க வன்பொருள் மற்றும் உபகரணங்களுக்கான பொறுப்பான வாழ்க்கைவட்ட முகாமைத்துவத்தை நடைமுறைப்படுத்தல்.

***(04 புள்ளிகள்)***

**(c)**

- **இணங்கும் மென்பொருள் பதிப்புகளுக்கு மேம்படுத்துதல்:** தொடர்ச்சியான பாதுகாப்பு புதுப்பிப்புகள் மற்றும் இணக்கத்தை உறுதிப்படுத்த, காலாவதியான மென்பொருள் பாதிப்புகளுடன் தொடர்புடைய அபாயங்களைக் குறைக்க, புதிய, அதிகாரப்பூர்வமாகப் பராமரிக்கப்படும் மென்பொருள் பதிப்புகளுக்கு மாறுதல்.
- **மென்பொருள் மற்றும் பிரயோகங்களின் மேம்படுத்தல்களைப் பேணுதல்:** பாதுகாப்பு, செயல்திறன் மற்றும் புதிய அம்சங்களுக்கான அணுகலை மேம்படுத்த அண்மைய மென்பொருள் மற்றும் பிரயோகங்களின் புதுப்பிப்புகளை தொடர்ந்து பதிவிறக்கம் செய்து நிறுவுதல்.
- **புதுப்பிக்கப்பட்ட வைரஸ் எதிர்ப்பு தீர்வுகளை பயன்படுத்தல்:** அண்மைய வைரஸ் வரையறைகள் மற்றும் பாதுகாப்பு இணைப்புகளுடன் புதுப்பித்த வைரஸ் எதிர்ப்பு மென்பொருளைப் பயன்படுத்தி, வளர்ந்து வரும் அச்சுறுத்தல்களிலிருந்து சிறப்பாகப் பாதுகாத்தல்.
- **கடவுச்சொல் நடைமுறைகளை வலுப்படுத்துதல்:** அங்கீகரிக்கப்படாத அணுகல் அபாயங்களைக் குறைக்க எழுத்துகள், எண்கள் மற்றும் சின்னங்களின் சேர்க்கைகளுடன் வலுவான, சிக்கலான கடவுச்சொற்களை உருவாக்குவதன் மூலம் பாதுகாப்பை மேம்படுத்தலாம்.
- **மின்னஞ்சல்களில் எச்சரிக்கையுடன் செயல்படுதல்:** சந்தேகத்திற்குரிய மின்னஞ்சல்களை உடனடியாகக் கண்டறிந்து நீக்குவதற்கு ஊழியர்களுக்குக் கற்பித்தல், தீங்கிழைக்கும் உள்ளடக்கம் அல்லது phishing முயற்சிகளைக் கொண்ட அறியப்படாத இணைப்புகள் அல்லது இணைப்புகளை அழுத்துவதைத் தவிர்த்தல்.
- **தரவு காப்புப் பிரதி நெறிமுறைகளைச் செயல்படுத்துதல்:** எதிர்பாராத சம்பவங்கள் அல்லது கணினி பிழைகள் ஏற்பட்டால் தரவை மீட்டெடுக்கும் திறனை உறுதிசெய்து, தரவு இழப்பு அபாயங்களைக் குறைக்க முக்கியமான கோப்புகள் மற்றும் தகவல்களைத் தொடர்ந்து

aat SRI LANKA

காப்புப் பிரதி எடுப்பதற்கான நடைமுறைகளை நிறுவுதல்.

- **சைபர் பாதுகாப்புப் பயிற்சியை வழங்குதல்:** சைபர் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை திறம்பட அடையாளம் காணவும் பதிலளிக்கவும் பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல், வளர்ந்து வரும் டிஜிட்டல் அபாயங்களுக்கு ஏற்ப சைபர் பாதுகாப்பு விழிப்புணர்வை வருடாந்த பயிற்சி திட்டங்களில் ஒருங்கிணைத்தல்.
- **பாதுகாப்பு கூட்டாண்மைகளை நிர்வகித்தல்:** விநியோகஸ்தர்கள் மற்றும் பங்காளர்களுடன் பாதுகாப்பான உறவுகளைப் பேணுதல், பாதிப்புகளைக் குறைப்பதற்கும் பரந்த விநியோகச் சங்கிலியைப் பாதுகாப்பதற்கும் சிறந்த நடைமுறைகள் மற்றும் இணக்கத் தரங்களைப் பின்பற்றுதல்.
- **வலுவான அங்கீகரிப்பு முறைகளை பின்பற்றுதல்:** பல காரணி அங்கீகார (MFA) வழிமுறைகளை செயல்படுத்துவதன் மூலம் அங்கீகார பாதுகாப்பை மேம்படுத்தல். இதன் மூலம் பயனர்கள் அணுகலுக்காக பல வகையான அடையாளங்களை வழங்க வேண்டும், இது அங்கீகரிக்கப்படாத நுழைவு அபாயத்தைக் குறைக்கிறது.
- **வழக்கமான புதுப்பித்தல் மற்றும் இணைப்பு முறைமைகள்:** அனைத்து முறைமைகளிலுமுள்ள மென்பொருள், இயக்க முறைமைகள் மற்றும் பிரயோகங்கள் மற்றும் உள்கட்டமைப்பு கூறுகள் முழுவதும் தொடர்ந்து புதுப்பித்தலுக்கான இணைக்க முறையான நடைமுறைகளை செயல்படுத்துதல். தானியங்கு இணைப்பு முகாமை கருவிகள் செயல்முறையை நெறிப்படுத்துகிறது, பாதுகாப்பு இணைப்புகளை சரியான நேரத்தில் பயன்படுத்துவதையும், தொழில் விதிமுறைகளுக்கு இணங்குவதையும் உறுதி செய்கின்றது.
- இணக்கமற்ற மென்பொருளைப் பயன்படுத்துவதைத் தவிர்த்தல்.

***(04 புள்ளிகள்)***

***(மொத்தம் 10 புள்ளிகள்)***

## *வினா 06 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:*

***அத்தியாம் 05 - தகவல் முறைமைகள் மீது தொழில்நுட்பப் போக்குகளின் தாக்கம்***

**(a)**

1. டிஜிட்டல் வாலட் தொழில்நுட்பத்தை ஒருங்கிணைத்து செயலிகளில் கட்டணம் செலுத்துதல்
2. QR குறியீட்டு கட்டணம் செலுத்துதல்
3. முன்பணக் கொடுப்பனவு
4. வங்கியில் இருந்தான தானியங்கி கழித்தல்
5. தானியங்கு விலைப்பட்டியல்
6. விசுவாசம் மற்றும் வெகுமதி அட்டைகள்
7. NFC (Near Field Communication) தொழில்நுட்பத்தை ஒருங்கிணைப்பதன் மூலம் தொடர்பு இல்லாத அட்டைப் பணம் செலுத்துதல்.

***(03 புள்ளிகள்)***

**(b)**

1. நெகிழ்வான மற்றும் வசதியான தன்மை
2. செலவு பயனுறுதி
3. பல்லூடக பயன்பாட்டுடன் மேம்படுத்தப்பட்ட கற்றல் அனுபவம்
4. கண்காணிக்கக்கூடிய முன்னேற்றம் மற்றும் செயல்திறன் அளவீடுகள்
5. பின்னூட்டல்களை எடுத்துக்கொள்வது (வணிக தீர்மானம் எடுத்தல்)
6. உண்மையான நேர தேவை கணிப்பு
7. தானியக்க அனுப்புதல்
8. தனிப்பயனாக்கப்பட்ட பயனர் அனுபவம்
9. புதுப்பிக்கப்பட்ட உள்ளடக்கம்

***(03 புள்ளிகள்)***

**(c)** ரெக்ரைட் வாடகைக் கார் சேவையானது செயற்கை நுண்ணறிவுடன் (AI) ஒருங்கிணைந்து பல்வேறு புதுமையான செயலிகள் மூலம் அதன் செயல்பாடுகளில் புரட்சியை ஏற்படுத்துவதோடு வாடிக்கையாளர் அனுபவங்களையும் மேம்படுத்தலாம்.

- **பாதை மேம்படுத்தல் மற்றும் வழிகாட்டி:** சாரதிகளுக்கான வழிகாட்டும் வினைத்திறனை மேம்படுத்த AI ஆல் இயக்கப்படும் பாதை மேம்படுத்தலை செயல்படுத்தலாம். இயந்திர கற்றல் வழிமுறைகள் நிகழ்நேர போக்குவரத்து தரவு மற்றும் வரலாற்று போக்குகளை பகுப்பாய்வு செய்து, பயண நேரங்கள் மற்றும் செயல்பாட்டு செலவுகளை குறைத்து பயணிகளின் திருப்தியை மேம்படுத்துகின்ற மிகவும் வினைத்திறனான வழிகளை பரிந்துரைக்கின்றன.
- **தனிப்பயனாக்கப்பட்ட வாடிக்கையாளர் அனுபவம்:** AI ஆனது பயனர் தரவு மற்றும் முன் தெரிவுகளை பகுப்பாய்வு செய்வதன் மூலம் வாடிக்கையாளர் அனுபவங்களை மாற்றியமைக்க முடியும். ரெக்ரைட் சேவையில் உள்ள பரிந்துரை முறைமைகள் விருப்பிய ஏற்றும் அமைவிடங்கள், அடிக்கடி செல்லும் இடங்கள் அல்லது தனிப்பட்ட நடத்தையின் அடிப்படையில் தனிப்பயனாக்கப்பட்ட விளம்பரங்களை பரிந்துரைக்கலாம். இயற்கை மொழி செயலாக்கம் (NLP) பயனுறுதி வாய்ந்த கோரிக்கை கையாளுதலுக்கான வாடிக்கையாளர் உதவி இடைமுகங்களை மேம்படுத்துகின்றது.
- **தன்னியக்க கட்டண மதிப்பீடு மற்றும் மாறும் விலை:** AI வழிமுறைகள் தூரம், போக்குவரத்து மற்றும் கேள்வி போன்ற காரணிகளைக் கருத்தில் கொண்டு நிகழ் நேர கட்டண மதிப்பீடுகளைக் கணக்கிடுகின்றன. அதிககூடிய கேள்வியின் போது வருவாயை அதிகப்படுத்த விலை நிர்ணயம் மாறும் வகையில் கட்டணங்களை சரிசெய்கின்றது, இது சாரதிகளுக்கும் மற்றும் பயணிகளுக்கும் நியாயமான தன்மையையும் மற்றும் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்கின்றது.

aat SRI LANKA

- **பாதுகாப்பு மற்றும் இடர் முகாமை:** AI செயற்படுத்தும் கணினி முறைமைகள் நிகழ்நேர பாதுகாப்பைக் கண்காணிக்கின்றன, பயணிகள் மற்றும் சாரதிகள் பாதுகாப்பை உறுதிசெய்ய ஆபத்துகள் மற்றும் அசாதாரண நடத்தைகளைக் கண்டறிகின்றது. மோசடிகளைக் கண்டறியும் முறைமைகள் பணம் செலுத்துதல் அல்லது முன்பதிவு தொடர்பான சந்தேகத்திற்கிடமான செயல்பாடுகளை அடையாளம் கண்டு தடுக்கின்றன.
- **தானியங்கு பராமரிப்பு அட்டவணையிடல்:** வாகன உணரியின் தரவு மற்றும் வரலாற்றுப் பதிவுகளை பகுப்பாய்வு செய்வதன் மூலம் பராமரிப்புக்கான தேவைகளை AI கணிக்கின்றது. இந்த அணுகுமுறை இடையில் ஏற்படும் பழுதுகளைத் தடுக்கிறது, வேலையில்லா நேரத்தைக் குறைக்கிறது மேலும் இதனால் வாகனத்தின் ஆயுளை நீட்டிக்கிறது, செலவுக் குறைப்பு மற்றும் நம்பகத்தன்மைக்கு பங்களிக்கிறது.

இந்தப் பகுதிகள் முழுவதும் AI தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலம், TechRide ஆனது வள ஒதுக்கீட்டை மேம்படுத்தவும், செயல்பாட்டுத் திறனை மேம்படுத்தவும், சிறந்த வாடிக்கையாளர் சேவையை வழங்கவும், டாக்சி சேவைத் துறையில் தன்னை ஒரு தலைவராக நிலைநிறுத்தவும் முடியும்.

***(04 புள்ளிகள்)***

***(மொத்தம் 10 புள்ளிகள்)***

aat SRI LANKA

***பிரிவு B முடிவு***

## வினா 07 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:

**(a)**

*அத்தியாம் 02 - தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்புக்கள்*

1. ஆரம்ப செலவு மற்றும் மாதாந்த சந்தா
2. வேகம் (பதிவேற்றம் மற்றும் பதிவிறக்க வேகம்) மற்றும் அலைவரிசை
3. கிடைக்கக் கூடிய தன்மை மற்றும் பாதுகாப்பு
4. தரவு Caps
5. ஒப்பந்தத்திற்கான விதிமுறைகள்
6. உபகரணங்கள் மற்றும் நிறுவல் செலவு
7. பணிநீக்க தெரிவுகள்
8. இணைப்பு வகை (ADSL, Fiber, HSDA, LTE, Satellite)
9. வாடிக்கையாளர் ஆதரவு மற்றும் நன்மதிப்பு
10. மேலதிக சேவைகள் மற்றும் தொகுப்புகள்
11. ISP ஒருங்கிணைந்த குரல் மற்றும் தரவு சேவையை வழங்குகிறதா
12. நம்பகத்தன்மை மற்றும் இயக்க நேரம்.
13. அலைவரிசை மற்றும் வேகத் தெரிவு.
14. பாதுகாப்பு மதிப்பீடுகள்.
15. அளவிடுதல்
16. நெகிழ்வுத்தன்மை.

*(04 புள்ளிகள்)*

aat SRI LANKA

**(b)**

*அத்தியாம் 03 - நிறுவனங்களில் தகவல் முறைமைகள்*

Super Drug Mart Ltd ஆனது ஒவ்வொரு முகாமை மட்டத்தின் தேவைகளை நிவர்த்தி செய்ய பின்வரும் தகவல் முறைமைகளை நடைமுறைப்படுத்த முடியும்.

- **செயல்பாட்டு மட்ட தகவல் முறைமை: இருப்பு முகாமை முறைமை**
  - ERP யில் உள்ள ஒரு இருப்பு முகாமை முறைமையானது இருப்பு மட்டங்களைக் கண்காணிக்கவும், கட்டளைகளை நிர்வகிக்கவும் மற்றும் கிளைகள் முழுவதும் மருந்துப் பொருட்களின் அசைவுகளைக் கண்காணிக்கவும் உதவுகின்றது.
  - பார்கோடு ஸ்கேனிங் மற்றும் நிகழ்நேர புதுப்பிப்புகள் மருந்துகளின் அளவுகள், காலாவதிகள் மற்றும் மறுகட்டளை மட்டம் என்பவற்றைக் கண்டறியவும், குறை இருப்புகள் மற்றும் அதிகப்படியான இருப்புகள் ஆகியவற்றைக் குறைக்கவும்

உதவுகின்றது.

- ○ இந்த முறைமையானது வினைத்திறனான இருப்பு முகாமையையும், எளிதான கொள்வனவு செயல்முறைகளையும் மற்றும் மருந்தக மட்டத்தில் சீரான செயற்பாடுகளையும் உறுதி செய்கிறது.

- **முகாமை மட்ட தகவல் முறைமை: வணிக நுண்ணறிவு ( BI) முறைமை**
    - ○ ERP யில் உள்ள வணிக நுண்ணறிவு Dash board ஆனது விற்பனை , இருப்பு மற்றும் வாடிக்கையாளர் தொடர்புகள் உட்பட பல்வேறு மூலங்களில் இருந்து தரவை ஒருங்கிணைக்கிறது.
    - ○ முகாமையாளர்கள் தீர்க்கமான பயனுள்ள முடிவுகளை எடுப்பதற்கு முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள் , விற்பனைப் போக்குகள் மற்றும் இருப்பு விற்பனை வருமான விகிதங்களைப் பகுப்பாய்வு செய்யலாம்.
    - ○ தனிப்பயனாக்கக்கூடிய அறிக்கைகள் மற்றும் காட்சிப்படுத்தல்கள் என்பன இருப்பு மட்டங்களை உச்சப்படுத்தவும் விளம்பர நடவடிக்கைகளை மதிப்பிடவும் கிளைகள் முழுவதும் வினைத்திறனை மேம்படுத்தவும் உதவுகின்றன.

- **நிர்வாக / தந்திரோபாய மட்ட தகவல் முறைமை: நிர்வாக தகவல் முறைமை (EIS)**
    - ○ ஒரு நிர்வாக தகவல் முறைமையானது (EIS) உயர்மட்டத் தீர்மானமெடுப்பவர்களுக்கு நிகழ்நேர சுருக்கங்கள் மற்றும் தந்திரோபாயத் தகவலை மையமாகக் கொண்ட பகுப்பாய்வுகளை வழங்குகிறது.
    - ○ இதில் நிதி அளவீடுகள், சந்தைப் போக்குகள் மற்றும் தந்திரோபாயத் தீர்மானமெடுப்பதற்கு உதவும் போட்டிப் பகுப்பாய்வு ஆகியவை அடங்கும்.
    - ○ EIS ஆனது நிகழ்நிலையினூடாக மருந்துப் பொருட்களின் விற்பனையின் வெற்றியை மதிப்பிடுவதற்கும் நிறுவனத்தின் போட்டி நிலையை மேம்படுத்த சமூக ஊடக விளம்பரங்களின் செயல்திறனைக் கண்காணிப்பதற்கும் நிர்வாகிகளுக்கு உதவுகிறது.

1. **செயற்பாட்டு மட்டம்**
    - OAS- வழக்கமான அலுவலகப் பணிகள் மற்றும் செயல்முறைகளை ஒருங்கிணைத்து தானியங்குபடுத்தும் கணணி அடிப்படையிலான தகவல் முகாமைத் தீர்வாகும்.
    - TPS- வணிகப்பரிவர்த்தனைகளை வழக்கமான மற்றும் திரும்பத் திரும்பக் கையாள்வதை எளிதாக்கும மற்றும் நிர்வகிக்கும் கணணிமயமாக்கப்பட்ட முறைமை.
2. **முகாமை மட்டம்**
    - MIS- ஒரு நிறுவனத்திற்குள் முகாமைத்துவத் தீர்மாமெடுக்கும் வகையில் தகவல்களைச் சேகரித்தல் , செயலாக்குதல், சேமித்தல் மற்றும் பரப்புதல் ஆகியவற்றைக் கொண்ட கணனி மயமாக்கப்பட்ட கட்டமைப்பாகும்.
3. **தந்திரோபாய மட்டம்**

aat SRI LANKA

- DSS- தொடர்புடைய மற்றும் சரியான நேரத்தில் தகவல்களை வழங்குவதன் மூலம் பயனுள்ள தீர்மானங்களை எடுப்பதற்கு தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு உதவும் தரவுப் பகுப்பாய்வு, மாதிரிப்படுத்தல் மற்றும் ஊடாடும் கருவிகளைப் பயன்படுத்தும் கணனி மயமாக்கப்பட்ட தகவல் முறைமை.
- ESS- நிபுணர்களிடமிருந்து பெறப்பட்ட அறிவு மற்றும் பிரச்சனைகளைத் தீர்க்கும் விதிகளைப் பயன்படுத்தி பயனர்களுக்குத் தீர்மானங்களை எடுப்பதற்கு அல்லது சிக்கலான பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு உதவும் கணனி அடிப்படையிலான செயலியாகும்.

***(05 புள்ளிகள்)***

**(c)**

1. வாடிக்கையாளர் பிரிவு
2. இலக்கு சந்தைப்படுத்தல்
3. இருப்பு முகாமை
4. மோசடியைக் கண்டறிதல் மற்றும் பாதுகாப்பு
5. நிகழ்நிலையினுடான சில்லறை விற்பனையை உச்சப்படுத்தல்
6. சமூக ஊடக ஈடுபாடு
7. உற்பத்திப் பரிந்துரை
8. கேள்வி எதிர்வுகூறல்
9. போட்டியாளர் பகுப்பாய்வு
10. போக்குப் பகுப்பாய்வு
11. புவியியல் பகுப்பாய்வு
12. வாடிக்கையாளர் நிலைத்திருப்பு பகுப்பாய்வு
13. மருந்து விநியோகத்திற்கான முன்கணிப்புப் பகுப்பாய்வு
14. சந்தைப்படுத்தல் பிரச்சாரத்தின் வினைத்திறன்
15. வாடிக்கையாளர் நடத்தையை பகுப்பாய்வு செய்தல்
16. வியாபாரக் குறியின் அடிப்படையில் பொருட்களை அடையாளம் காணல்
17. கேள்வி வேகத்துடன் பொருட்களின் வியாபாரக் குறியை பகுப்பாய்வு செய்தல்

***(04 புள்ளிகள்)***

**(d)**

- **உலகளாவிய பாவனையாளர்கள்:** இணையத்தளமானது மருந்தக வலையமைப்பை உலகெங்கிலும் உள்ள பல்வேறு புவியியல் அமைவிடங்களிலுமுள்ள பலதரப்பட்ட மற்றும் பரவலான பாவனையாளர்களை அடைய வழிவகுக்கின்றது. மேலும் அதன் சந்தையை பொதீக இருப்பிடங்களிற்கப்பால் விரிவுபடுத்தவும் உதவுகின்றது.
- **24/7 கிடைக்கும் தன்மை:** இணையத்தளமானது ஒரு நாளின் 24 மணி நேரமும் வாரத்தில் ஏழு நாட்களும் செயற்படுகின்றது. வாடிக்கையாளர்களுக்கு பொருட்கள், சேவைகள் மற்றும்

தகவல்களுக்கான நிலையான கிடைக்கக்கூடிய வசதியை வழங்கி வசதி மற்றும் அணுகலை மேம்படுத்துகிறது.

- **வாடிக்கையாளர்களுக்கான வசதி:** தடையற்ற மற்றும் பயனர்- நட்பு நிகழ்நிலைத் தளத்தை வழங்குவதன் மூலம் தயாரிப்புக்கள் , சேவைகள் மற்றும் தகவல்களை வாடிக்கையாளர்கள் எங்கேயும் எந்த நேரத்திலும் எளிதாக அணுக முடியும். இது அவர்களின் ஒட்டுமொத்த அனுபவத்தை மேம்படுத்துகிறது.
- **தனிப்பயனாக்கப்பட்ட சேவைகள்:** இணையத்தளமானது வாடிக்கையாளர் விருப்பத்தெரிவுகள், நடத்தைகள் மற்றும் வரலாற்றுத் தொடர்புகளை பகுப்பாய்வு செய்வதன் மூலமும் தனிப்பட்ட தேவைகளிற்கேற்ப பொருட்களிற்கான பரிந்துரைகள் மற்றும் அனுபவங்களை வழங்குவதன் மூலமும் வாடிக்கையாளர் திருப்தி மற்றும் விசுவாசத்தை மேம்படுத்துகிறது.
- **தகவல் பகிர்வு:** இணையத்தளமானது நிறுவன அலகுகள் மற்றும் அக்கறையுடையோர்களிற்கு தகவலை தடையின்றி பகிர்ந்து கொள்ளவும் ஒத்துழைப்பை மேம்படுத்தவும் மின்னஞ்சல், VoIP, அரட்டை மற்றும் வேறு ஊடகங்கள் மூலம் தகவல் தொடர்புகளை மேம்படுத்துகிறது.
- **விரிவாக்கப்பட்ட சந்தை அணுகல் மற்றும் வாடிக்கையாளர் அணுகல்:** இணையத்தளத்தின் மூலம் Super Drug Mart ஆனது அதன் சந்தை எல்லையை விரிவுபடுத்தி அதன் பௌதிக அமைவிடத்திற்கப்பால் வாடிக்கையாளர்களுக்குச் சேவை செய்ய முடியும். இந்த விரிவாக்கப்பட்ட அணுகலானது தொலைதூரப் பகுதிகளில் உள்ளவர்கள் அல்லது நிகழ்நிலைக் கொள்வனவை விரும்புபவர்கள் உட்பட பாரிய வாடிக்கையாளர் தளத்தை அடைவதற்கு மருந்தகத்திற்கு உதவுகின்றது.
- **மேம்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் ஈடுபாடு மற்றும் தகவல் பகிர்வு:** இணையத்தளமானது வாடிக்கையாளர் ஈடுபாடு மற்றும் தகவல் பகிர்விற்கான தளமாகச் செயல்படுகிறது. இது மருந்துகள் தொடர்பான தகவல;, சுகாதார உதவிக்குறிப்புக்கள், விளம்பரங்கள், நவீன புதுப்பிப்புக்கள் அல்லது போக்குகள் மற்றும் வாடிக்கையாளருடன் நேரடித் தொடர்பை வளர்ப்பது தொடர்பான மதிப்புமிக்க உள்ளடக்கத்தை கொண்டிருக்கின்றது. வலைப்பதிவுகள் , செய்திமடல்கள் நேரடி அரட்டை அரங்கம் போன்ற ஊடாடும் அம்சங்கள் வாடிக்கையாளர் ஈடுபாடு மற்றும் திருப்தியை மேலும் மேம்படுத்துகிறது. பொருட்களின் நம்பகத்தன்மை மற்றும் தொடர்புகளை வலுப்படுத்துகிறது. மேலும் நிகழ்நிலை மருத்துவ சேவைகள் போன்ற செயல்பாடுகள் வாடிக்கையாளர் வசதியையும் திருப்தியையும் மேம்படுத்துகின்றன.

***(04 புள்ளிகள்)***

**(e)**

- **செயற்படுத்தக்கூடிய தன்மை:** முகில் அடிப்படையிலான தீர்வானது உலகின் எந்தவொரு இடத்திலிருந்தும் இணைய இணைப்புள்ள எந்த சாதனத்திலிருந்தும் செயலிகளை மற்றும் தரவை அணுக வழிவகுக்கின்றது. இந்த செயற்படுத்தக்கூடியதன்மையானது பல்வேறு கிளைகளில் உள்ள ஊழியர்கள் இலகுவாக ஒன்றிணைந்து தேவையான தகவல்களை



aat SRI LANKA

நிகழ்நேரத்தில் அணுகுவதை உறுதிசெய்கின்றது. இது இருப்பு மட்டம், மருந்துச் செயலாக்கம் மற்றும் வாடிக்கையாளர் தொடர்புகளின் சீரான ஒருங்கிணைப்பிற்கு வழிவகுக்கின்றது.

- **செலவு சேமிப்பு:** முகில் அடிப்படையிலான தீர்வானது தளத்தில் உட்கட்டமைப்பைப் பெறுவதற்கும் பராமரிப்பதற்குமான செலவிலிருந்து Pay as you go model தீர்வக வளங்களை வழங்குகி Super Drug Mart ஐச் பாதுகாக்கின்றது. இதன் மூலம் வணிகங்கள் தாங்கள் பயன்படுத்தும் வளங்ளுக்கு மட்டுமே பணம் செலுத்துகின்றன, வன்பொருளில் முன்கூட்டிய முதலீடுகளின் தேவையை நீக்கி, பொதீக உட்கட்டமைப்பைப் பராமரிப்பதுடன் தொடர்புடைய செயல்பாட்டுச் செலவுகளைக் குறைக்கின்றன.
- **பாதுகாப்பு:** Cloud வழங்குனர்கள் , cloud ல் சேமிக்கப்பட்ட வாடிக்கையாளர் தரவைப் பாதுகாக்க வலுவான பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் தரநிலைகளைக் கொண்டுள்ளார்கள்.Cloud அடிப்படையிலான தீர்வைப் பயன்படுத்துவதன் மூலம் , தரவு குறியாக்கம், வழக்கமான பாதுகாப்புத் தரவுகள் மற்றும் நவீன அச்சுறுத்தல்களை அடையாளம் காணல் உள்ளிட்ட மேம்பட்ட பாதுகாப்பு மற்றும் முக்கியமான தகவல்களின் இரகசியத்தன்மை மற்றும் ஒருமைப்பாட்டை உறுதி செய்யும் வழிமுறைகள் போன்ற அம்சங்களில் இருந்து Super Drug Mart பயனடையலாம்.
- **அளவிடுதல் மற்றும் வளமேம்படுத்தல்**: Cloud அடிப்படையிலான தீர்வுகள் வழங்குகின்ற அளவிடக் கூடிய தன்மையை பயன்படுத்தி Super Drug Mart ஆனது கேள்வியின் அடிப்படையில் கணிப்பீட்டு வளங்களை மாறும் வகையில் சரிசெய்ய அனுமதிக்கின்றது .இந்த நெகிழ்வுத் தன்மையானது வணிகத் தேவைகளின் அடிப்படையில் மருந்தக வலையமைப்பை திறம்பட அதிகரிக்க அல்லது குறைக்க உதவுகிறது. உகந்த வளப்பயன்பாட்டை உறுதிசெய்து மேலதிக ஒதுக்கீடு இடம்பெறுவதைத் தடுக்கின்றது மற்றும் அதன் மூலம் செயல்பாட்டுச் செலவுகளைக் குறைக்கிறது.
- **ஒருமைப்பாடு மற்றும் தொலைநிலை அணுகல்:** Cloud அடிப்படையிலான தீர்வுகள் ஒத்துழைப்பு மற்றும் தொலைநிலை அணுகலை எளிதாக்குகிறது.வணிக நடவடிக்கைகளின் செயல்திறனை மேம்படுத்துகிறது.வெவ்வேறு கிளைகள் அல்லது இருப்பிடங்களிலுள்ள பணியாளர்கள் Cloud அடிப்படையிலான ஒருமைப்பாட்டுக் கருவிகள் மற்றும் சேமிப்பகத் தீர்வுகளைப் பயன்படுத்தி நிகழ்நேரத்தில் தடையின்றி ஒன்றிணைந்து செயற்பட முடியும்.மேலும், ஊடமுரன அடிப்படையிலான தீர்வுகள் முக்கியமான வணிக பயன்பாடுகள் மற்றும் தரவுகளுக்கான தொலைநிலை அணுகலைச் செயற்படுத்துகின்றன. வெவ்வேறு கிளைகளில் இருந்து அல்லது தொலைதூரத்தில் பணிபுரிய ஊழியர்களிற்கு அதிகாரம் அளிக்கின்றன. இது மேம்பட்ட ஒத்துழைப்பு, நெறிப்படுத்தப்பட்ட பணிப்பாய்வுகள் மற்றும் Super Drug Mart இன் ஒட்டுமொத்த செயற்பாட்டுத்திறனிற்கும் வழிவகுக்கும்.

***(04 புள்ளிகள்)***

**(f)**

1. பயனர் கருத்துக்கள் மற்றும் மதிப்புரைகள்
2. நேரடி செய்தி அனுப்புதல்
3. நோயாளியின் இரகசியத் தன்னை
4. மருந்துச் சீட்டுத் தகவல்கள்
5. சமூக ஊடகங்களில் மருந்தகம் தொடர்பான பதிவுகள்
6. மருந்தாளி-நோயாளி தொடர்பு
7. மூன்றாம் தரப்பு செயற்பாடுகள் மற்றும் செருகுநிரல்கள்
8. பகுப்பாய்வு மற்றும் கண்காணிப்பு
9. இலக்கு விளம்பரம்
10. தரவு வைத்திருத்தல் மற்றும் நீக்குதல்
11. பயனர் உருவாக்கிய உள்ளடக்கத்திற்கான ஒப்புதல்
12. வாடிக்கையாளர் தனியுரிமை மற்றும் தரவுப் பாதுகாப்பு
13. பணியாளர் தனியுரிமை
14. மூன்றாம் தரப்பு விற்பனையாளர் அபாயங்கள்

***(03 புள்ளிகள்)***
***(மொத்தம் 25 புள்ளிகள்)***

aat SRI LANKA

***பிரிவு C முடிவு***

## *Notice:*

These answers complied and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.

These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers". The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2021 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka). All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*